# ஈரோடு மாவட்டம் – அவல்பூந்துறை (முதல்நிலை) பேரூராட்சி

**ந.க.எண்.171/2022** **நாள்:11.05.2022.**

## தூய்மை இந்தியா திட்டம்2.0 – 2021–2022 – சமுதாய கழிப்பிடம் கட்டுதல்

## SWACHH BHARAT MISSION (URBAN) 2.0 - 2021-2022

## 2000ம் வருடத்திய தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் (Tamil Nadu Transparency in Tenders Rules 2000) விதிமுறைகளின் படி அறிவிக்கப்படும்

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஈரோடு மாவட்டம், அவல்பூந்துறை பேரூராட்சி பகுதியில் பட்டியலில் கண்டுள்ள வளர்ச்சிப்பணியை செய்து முடிக்க தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன.

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அவல்பூந்துறை பேரூராட்சியின் சார்பாக அதன் செயல்அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் **25.05.2022–ம் தேதி புதன்கிழமை** பிற்பகல் **3.00** மணி வரை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு அவல்பூந்துறை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு உறை முறையில், மூடி முத்திரையிடப்பட்டு, மேல் உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும்,டெண்டர் தேதி மற்றும் நேரவிபரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் **25.05.2022–ம் தேதி புதன்கிழமை** பிற்பகல் **3.30** மணிக்கு பிறகு பேரூராட்சியில் செயல்அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் “Technical Bid” திறந்து பரிசீலனை செய்யப்படும். வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **25.05.2022–ம் தேதி புதன்கிழமை 3.00**மணி வரை **https://www.tenders.tn.gov.in** மற்றும் **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரிகளில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது பட்டியலில் கண்டுள்ள தொகைக்கான வங்கி வரைவோலை அல்லது வங்கி கொடு ஆணை சமர்ப்பித்து அவல்பூந்துறை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 24.05.2022–ஆம் தேதி செவ்வாய்கிழமை பிற்பகல் **3.00**மணி வரை கீழ்க்கண்ட பட்டியலில் கலம் எண்.**4**ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை நேரடியாக பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளிகளை கணினி மூலமே பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து மின்னணு பரிவர்த்தனை மூலம் கையொப்பமிட்டு கணினி வழியாகவே அனுப்பலாம் அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்களை அவல்பூந்துறை பேரூராட்சி அலுவலகத்தில் நேரிடையாக **25.05.2022–ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள்** ஒப்படைக்கலாம்.

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள், ஒவ்வொரு வேலைக்கும் செலுத்த வேண்டிய டேவணித் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டால் செலுத்தப்பட வேண்டிய காப்புத் தொகை, சால்வன்சித் தொகை மற்றும் இதர விபரங்கள் இவ்வலுவலகத்தில் வேலை நாட்களிலும் வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

## வளர்ச்சிப்பணிகள் பட்டியல்

## தூய்மை இந்தியா திட்டம்2.0 – 2021–2022 – சமுதாய கழிப்பிடம் கட்டுதல்

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஷெட்யூல் படிவம் கிரயத் தொகை | ஒப்பந்தப் புள்ளி டேவணித் தொகை | வேலை செய்து முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.4 சோளிபாளையம் அரிசன காலனியில் 5+5 இருக்கைகள் கொண்ட புதிய சமுதாய கழிப்பிடம் அமைத்தல் | ரூ.15.00 இலட்சம் | ரூ.6,240/– | ரூ.30,000/– | 120 நாட்கள் |

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. ஒப்பந்தக்காரர்கள் இப்பேரூராட்சியின் பதிவுபெற்ற Class I & II ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும் மற்றும் இதர துறைகளில் ஒப்பந்ததாரராக இருந்து அவர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்தால் ஒப்பந்ததாரராக உடன் பேரூராட்சியில் உரிய ஆவணங்களைக் கொடுத்து பதிவு செய்ய வேண்டும்.

2. ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகை செலுத்திய வங்கி வரைவோலை அல்லது வங்கி கொடு ஆணை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும், எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

3. செலுத்தப்படும் டேவணித் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்பட மாட்டாது.

4. ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைக்குள் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி செயல் அலுவலர், அவல்பூந்துறை பேரூராட்சி என்ற முகவரியிட்டு, கொடுக்க வேண்டும். உறையில் ஒப்பந்தக்காரரின் முழு அஞ்சல் முகவரி இருக்க வேண்டும்.

5. ஒப்பந்தக்காரர் தம்மால் அளிக்கப்பட்ட டெண்டரை எவ்வித காரணமும் இல்லாமல் விலக்கிக்கொண்டால் (டெண்டரை ஏற்றுக் கொள்பவர் முடிவு செய்ய வேண்டும்) அவரால் பின்னர் அளிக்கும் டெண்டர்களை எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்க நேரிடும்.

6. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு விதிமுறைகளை அனுசரித்து வேலை உத்திரவு வழங்கப்படும்.

7. ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு Letter of Acceptance வழங்கப்பட்டு, ரூ.100/– மதிப்புள்ள முத்திரைத் தாளில் உடன்படிக்கை எழுதிக்கொடுக்கப்பட்ட பின்னர் வேலை உத்தரவு வழங்கப்படும்.

8. வேலை உத்திரவில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்க வேண்டும். இல்லையேல் வேலையை ரத்துச் செய்யவும், அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எல்லா இழப்புக்கும் ஒப்பந்தக்காரர்களே பொறுப்பாவார்கள்.

9. ஒப்பந்தப்புள்ளி கொடுத்த பின்பு, பின்வாங்கும் ஒப்பந்ததாரர்களின் டேவணித் தொகையும், நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றாத ஒப்பந்ததாரர்களின் வைப்புத் தொகைகளும் எவ்வித அறிவிப்பும் இன்றி பறிமுதல் செய்யப்படும்.

10 குறிப்பிட்ட தேதிக்குள் வேலையை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்தக்காரர் அவ்வேலைக்கென செலுத்தப்பட்ட டேவணித் தொகையை பறிமுதல் செய்ததாகக்கருதப்பட்டு, பேரூராட்சியின்நிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுவேலை செய்து முடிப்பதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும், முந்தைய ஒப்பந்தக்காரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.

11. ஒப்பந்ததாரர்களே சிமெண்ட் மற்றும் தார் (60/70 மற்றும் Emulsion) வாங்கிக் கொள்ள வேண்டும். இதன் பொருட்டு, வேலைகள் பாதிக்கப்படக்கூடாது. இதற்கு சம்மதம் அளிக்கும் நபர்கள் மட்டுமே டெண்டர் கொடுக்க வேண்டும். சிமெண்ட் மற்றும் தார்க்கு தரச்சான்று, வேலை முடித்ததற்கான பட்டியலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

12. கட்டுமான வேலைக்கென சேகரம் செய்யப்படும் பொருள்கள் பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால், ஏழு தினங்களுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன், பொறியாளரால் ஏற்றுக் கொள்ளப்படும்

வகையில் தரம் வாய்ந்த மாற்றுப் பொருட்களை வேலை நடக்கும் இடத்தில், ஒப்பந்தக்காரர் சேகரித்தல் வேண்டும். தவறினால் நிராகரிக்கப்பட்ட பொருட்கள், பேரூராட்சிப் பொருட்களாக கருதி அப்புறப்படுத்தப்படும்.

13. யாருடைய டெண்டர் ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ அவரால் செலுத்திய டேவணித்தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பிக் கொடுக்கப்படும்.

14. வேலையை முடித்த பின்னர் பட்டியலில் கீழ்க்காணும் தொகைகள் கழித்துக் கொள்ளப்பட்டு, மீதித் தொகையை மட்டும் பட்டுவாடா செய்யப்படும்.

| வ.எண் | விபரம் | பிடித்தம் செய்யும் அளவு |
|---|---|---|
| 1 | கூடுதல் வைப்புத்தொகை | 3% |
| 2 | வருமான வரி | 2% |
| 3 | மேல்வரி (வருமானவரி) | 10% |
| 4 | கல்வி வரி (வருமானவரி மேல்வரி) | 3% |
| 5 | GST | 2% |
| 6 | நிறுத்தி வைக்கப்படும் தொகை | 5% |
| 7 | தொழிலாளர் நலச்சந்தா தொகை | 1% |

15. தொடர்புடைய வேலைகளுக்கான பட்டியல் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கைத் தடைஏதும் இல்லையென முடிவு தெரிந்த பின்னர்தான் அவ்வேலைகளுக்கான ஒப்பந்தக்காரரால்செலுத்தப்பட்ட டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பித் தரப்படும்.

16. வேலைகள் சம்பந்தமான அவ்வப்போது அரசினரால் வெளியிடப்படும் உத்திரவுகளுக்குட்பட்டு ஒப்பந்தக்காரர்கள் வேலைகள் செய்ய வேண்டும்.

17. ஒப்பந்ததாரருக்கு ஒப்படைக்கும் பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் துறை நடவடிக்கையான அபராதம் மற்றும் ஒப்பந்தம் ரத்து செய்வதை ஒப்பந்ததாரரால் தவிர்க்கப்படல் வேண்டும்.

18. சாலை வேலைக்கு முறையான அளவுள்ள மதிப்பீட்டில் உள்ள அளவுக்கு கருங்கல் ஜல்லி சேகரம் செய்ய வேண்டும். பொறியாளரின் ஆய்வுக்கு பின்பு பொருட்களை வேலைக்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

19. சாலை வேலைக்கு தேவையான தார் மற்றும் இதர பொருட்கள் அனைத்தும் ஒப்பந்ததாரரே வாங்கி பொறியாளரின் ஆய்வுக்கு பின்பு பயன்படுத்தப்பட வேண்டும். பயன்படுத்தப்படும் பொருட்களுக்கு உரிய தரச்சான்று பெறப்பட வேண்டும்.

20. Engineering Manual படி பணிக்கான ஒப்பந்த காலத்திற்குள் பணியினை ஒப்பந்ததாரர்கள் மந்தமான முறையில் மிக மெதுவாக பணியில் முன்னேற்றம் காண்பிக்கும்பட்சத்தில் (Penalty for slow progress) அபராதம் ஒப்பந்த மதிப்பில் 5% விதித்து பட்டியல் தொகையில் ஈடுசெய்யப்படும்.

21. Engineering Manual படி கட்டிட பொறியியலில் தேர்ச்சி பெற்ற பொறியாளரை பணி துவங்கி முடிக்கும் நாள் முடிய இப்பணிக்கு ஈடுபடுத்தப்பட்டு மதிப்பீட்டு தொகைக்கு உட்பட்டு பணியினை முழுமையாக முடித்து பயனீட்டிற்கு விட ஈடுபடுத்தப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் ஒப்பந்ததாரரிடம் மாதம் ஒன்றுக்கு ரூ.3,000/– வீதம் பிடித்தம் செய்து பட்டியல் தொகையில் ஈடு செய்யப்படும்.

22. பணியை துவங்குவதற்கு முன்பும், பணி நடைபெறும் பொழுதும், பணி முடிவுற்ற நிலையிலும் ஆகிய மூன்று நிலையிலும் புகைப்படம் எடுத்து பட்டியலுடன் இணைக்கப்பட வேண்டும்.

23. பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்கள் அனைத்தையும் அரசு தொழில்நுட்ப கல்லூரியில் ஆய்வு செய்து அதன் பின்னர் பயன்படுத்தப்பட வேண்டும்.

## சிறப்பு நிபந்தனைகள்

1. ஒப்பந்தக்காரர்கள், இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். டேவணித் தொகை முன் அனுபவச் சான்றிதழ், ஒப்பந்தக்காரர் தகுதிச் சான்றிதழ் (Class – I & II) நிதி நிலை அறிக்கை, விற்பனை வரிச் சான்றிதழ் போன்ற விவரங்களை ஒரு உறையில் வைத்து, உறையின் வெளிப்புறத்தில்

“Technical Bid” என்று குறிப்பிடப்பட வேண்டும். மற்றொரு உறையில் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப் படிவம் வைத்து அவ்வுறையின் வெளிப்புறத்தில் “Price Bid” என்று குறிப்பிடப்பட வேண்டும். இவ்விரண்டு உறைகளையும் மூடி முத்திரையிட்டு மற்றொரு பெரிய உறையில் போட்டு அதனையும் மூடி முத்திரையிட்டு அவ்வுறையின் மேல் வேலையின் பெயர், மதிப்பீடு, ஒப்பந்தப்புள்ளி நாள், ஒப்பந்ததாரர் பெயர் போன்ற விபரங்கள் தெளிவாக எழுதப்பட வேண்டும். இதில் முதலில் “Technical Bid” என்று குறிப்பிட்டுள்ள உறை பிரிக்கப்பட்டு, அதில் வைக்கப்பட்டுள்ள சான்றிதழ்கள் ஒப்பந்தப்புள்ளி கட்டுப்பாட்டின்படி தேவையான விவரங்கள் தகுதியாக இருந்தால் மட்டுமே “Price Bid” என்று குறிப்பிடப்பட்டிருக்கும் இரண்டாவது உறை திறக்கப்படும். அவ்வாறு ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின் படி தகுதியானதாக இல்லையெனில் “Price Bid” உறை திறக்கப்படாமலே நிராகரிக்கப்படும்.

2. “Technical Bid” உறையில் வைக்கப்பட வேண்டியவை

3) ஒப்பந்ததாரர்கள் கட்டுமானப்பணிகள் மற்றும் சாலைப்பணிகள் செயல்படுத்துவதில் 5 ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்கள் என்பதற்கான சான்று

4) ஒப்பந்ததார்கள் கடந்த 3 ஆண்டுகளில் கட்டுமானப்பணிகள் மற்றும் சாலைப்பணிகள் செயல்படுத்தியதில், தற்போது கோரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பில் 50% சதவீதத்திற்கு மேல் ஒரே பணியில் செயல்படுத்தியமைக்கான சான்று

5) ஒப்பந்ததாரர்கள் கடந்த 3 ஆண்டுகளில் தொடர்ச்சியாக செயல்படுத்திய வேலைகளுக்கான மதிப்பு தற்போது கோரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பில் 50% சதவீதத்திற்கு அதிகமாக உள்ளது என்பதற்கான சான்று

6) ஒப்பந்ததாரர் தற்போது கோரும் ஒப்பந்தப் பணிக்கான மதிப்புத் தொகையில் 15% சதவீதத்திற்கு அதிகமான தொகையை வங்கி இருப்பாக வைத்துள்ளமைக்கான வங்கி பாஸ் புத்தக நகல் அல்லது வங்கி மேலாளர் சான்று

7) தார்சாலை மற்றும் காங்கீரிட் சாலை பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி தருபவர்கள் அந்தந்த பணிகளுக்கு தேவையான கீழ்க்காணும் இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் சொந்தமாக உள்ளமைக்கான சான்றுகள் இணைக்க வேண்டும். அல்லது கீழ்க்காணும் இயந்திரங்கள் மற்றும் வாகனங்களின் உரிமையாளர்களிடம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டமைக்கான Agreement நகலினை இணைக்க வேண்டும். மேலும், உரிமையாளர்களின் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் தொடர்பான R.C. புக் போன்ற ஆவணங்களின் நகல்களை இணைக்க வேண்டும்.

| Sl No | Name of the Equipment | Quantity |
|---|---|---|
| 1 | Concrete Mixer Machine | 1 No. |
| 2 | Water Tanker Lorry | 1 No. |
| 3 | Centering Material | 200 Sqm. |
| 4 | Concrete Vibrator | 1 No. |
| 5 | Static Roller | 1 No. |
| 6 | Vibratory Roller | 1 No. |
| 7 | Earth Moving Machinery | 1 Nos. |
| 8 | Tipper lorry | 1 Nos. |

8) ஒப்பந்ததாரர்கள் விற்பனைவரி செலுத்தியமைக்கான (Latest Tin Return) சான்று இணைக்கப்பட வேண்டும்.

9) மேற்காணும் சான்றுகள் அனைத்தும் Notary Public Officers அல்லது செயற்பொறியாளர் பணியிடத்திற்கு குறையாத உயர் அலுவலர்களால் சான்றொப்பம் பெறப்பட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

10) ஒப்பந்த ஆவணங்கள் மற்றும் நிபந்தனைகளை ஒப்புக்கொண்டமைக்கு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த ஆவணங்களில் ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்து இட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

11) இத்திட்ட சாலை பணி முடிக்கப்பட்டவுடன் இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு சாலைப் பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை ஒப்பந்ததாரரே சொந்த செலவில் சீரமைக்கப்பட வேண்டும். நிறுத்தி வைக்கப்படும் தொகை இரண்டு ஆண்டுகள் முடிவுற்ற பின்னர் பொறியாளரின் சான்று பெற்று திரும்ப வழங்கப்படும்.

12) பணி நடைபெறும் இடங்களில் பணி குறித்த விபரங்கள் அடங்கிய தரமான தகவல் பலகை 6அடி x4 அடி (1.80 m x 1.20 m) வைக்கப்பட வேண்டும் மற்றும் கிலோ மீட்டர் கல், ஃபர்லாங் கல் வைக்கப்பட வேண்டும்.

13) ஒப்பந்த காலக்கெடுவுக்குள் பணி முடிக்காத ஒப்பந்ததாரர்களுக்கு பணியை திருப்திகரமாக முடித்த சான்றிதழ் வழங்க இயலாது.

செயல் அலுவலர்,
அவல்பூந்துறை பேரூராட்சி
ஈரோடு மாவட்டம்.

**<u>பெறுதல்</u>**

பதிவு பெற்ற அனைத்து ஒப்பந்தக்காரர்கள், அவல்பூந்துறைபேரூராட்சி.
(அஞ்சலிட்ட சான்று மூலம்)

**<u>நகல்:</u>**

1. பேரூராட்சிகள் இயக்குநர் சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது
2. ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட ஆட்சியரகம், ஈரோடு அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. செயற் பொறியாளர், (பேரூராட்சிகள்) சென்னை அவர்களுக்கு, தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
5. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், ஈரோடு மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
6. உதவி செயற்பொறியாளர், (பேரூராட்சிகள்) ஈரோடு அவர்களுக்கு, தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
7. உதவிப் பொறியாளர், அவல்பூந்துறை பேரூராட்சி (தொகுப்பு).
8. செயல்அலுவலர், மொடக்குறிச்சி, அரச்சலூர், சிவகிரி, கொடுமுடி, சென்னசமுத்திரம், வெங்கம்பூர், வெள்ளோட்டாம்பரப்பு, கிளாம்பாடி, வடுகபட்டி, கொல்லன்கோவில், ஊஞ்சலூர், பாசூர், விளம்பரப்பலகைக்கு ஒட்டி விளம்பரம் செய்ய அனுப்பப்படுகிறது.
9. ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம் மொடக்குறிச்சி மற்றும் கொடுமுடி விளம்பரப்பலகைக்கு.
10. உதவி கோட்ட பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, கொடுமுடி விளம்பரப்பலகைக்கு.
11. அலுவலக விளம்பரப்பலகைக்கு.